
பெரம்பலூர் மாவட்ட திருக்கோயில்கள் வரைபடம்



திருக்கோயில்கள் வழிகாட்டி

பெரம்பலூர் மாவட்டம்



தமிழ்நாடு அரசு
இந்து சமய அறநிலையத்துறை

முதற் பதிப்பு	:	ஆகஸ்ட் 2014
முன் அட்டை	:	**அருள்மிகு மதுரகாளியம்மன்** **சிறுவாச்சூர்.**
பின் அட்டை	:	**அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில்,** **செட்டிக்குளம்**
உள் அட்டை	:	**அருள்மிகு மதனகோபாலசுவாமி,** **பெரம்பலூர்**
அச்சிடுவோர்	:	திருமலை பிரிண்டர்ஸ், திருச்சி.
விலை	:	ரூ. 50/-
உரிமை	:	**இந்து சமய அறநிலையத்துறை, தமிழ்நாடு அரசு**

நமது திருக்கோயில்களின் சிறப்புகளை பக்தர்கள் அறிந்து பயன்படும் வகையில் திருக்கோயில் பயணியர் கையேடு வெளியிட வேண்டும் என்ற கருத்தில் இக்கையேட்டினை உடன் வெளியிட அனுமதி வழங்கிய இந்து சமய அறநிலையத்துறை அவர்களுக்கும், அரசுச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களுக்கும் நன்றி.

இக்கையேட்டினை வெளியிட உதவிகள் புரிந்த அரியலூர் மாவட்ட உதவி ஆணையர், இக்கையேட்டிற்கு திருக்கோயில் பற்றிய செய்திகள் வழங்கிய அனைத்து திருக்கோயில் செயல் அலுவலர்கள், பரம்பரை அறங்காவலர்கள், மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றி.

அழகிய படங்களுடன் சிறப்பாக அச்சிட்டுத் தந்த அச்சகத்தாருக்கும் நன்றி உரித்தாகுக.

இந்த நூலைப் பக்தர்களும் தெய்வீகச் சுற்றுலா வருபவர்களும் வாங்கிப் படித்து பயன் அடைந்திட அன்புடன் வேண்டுகிறேன்.

(சி. கல்யாணி)
இணை ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை,
திருச்சிராப்பள்ளி மண்டலம்

அமைதி – வளர்ச்சி – வளமை



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள்

R. காமராஜ்
இந்து சமயம் மற்றும்
அறநிலையத்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.

நாள் 10.02.2014

வாழ்த்துச் செய்தி

“ ஆலயம் தொழுவது சாலவும் நன்று” என்பது ஆன்றவிந்து அடங்கிய ஆன்றோர் கூறிய அமுத மொழியாகும். அந்த அமுத மொழியை தம் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஆலய வழிபாடுகளை முறையாகச் செய்து மேன்மை பெற்றவர்கள் நம் முன்னோர்கள்.

மன்னவர்களும் அவர்களை அருள்வழியில் செலுத்திய இறையருள் பெற்ற முன்னவர்களும் இப்பெரு மக்களைப் பின்தொடர்ந்த பின்னவர்களும் பக்தியுடன் எழுப்பிய இறைமாளிகைகளே திருக்கோயில்களாக மிளிர்கின்றன, ஒளிர்கின்றன. நமது தமிழகத்தில் ஆயிரக்கணக்கில் திகழும் திருக்கோயில்கள் நம்பிக்கையின் சின்னங்கள்.

நம்பினார் கெடுவதில்லை – இது
நான்கு மறை தீர்ப்பு
நல்லவர்க்கும் ஏழையர்க்கும்
ஆண்டவனே காப்பு

என்னும் பாடல் வரிகள் திருக்கோயில்களின் மேன்மையைக் காட்டும் வைர வரிகள் ஆகும்.பக்தர்களுக்கு பயன்படும் வகையில் பெரம்பலூர் மாவட்டத்திற்கு திருக்கோயில்கள் வழிகாட்டி ஒன்றை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். சீலம் நிறைந்த பெரம்பலூர் மாவட்டம் ஞாலம் போற்றும் திருக்கோயில்கள் பலவற்றைப் பெற்றுள்ளது.

சிறுவாச்சூர் அருள்மிகு மதுர காளியம்மன் திருக்கோயில், பெரம்பலூர் அருள்மிகு மதனகோபாலசுவாமி திருக்கோயில் , செட்டிக்குளம் அருள்மிகு ஏகாம்பரேசுவரர் மற்றும் அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் , பாடாலூர் அருள்மிகு பூமலை சஞ்சீவிராயர் திருக்கோயில் என பல்வேறு திருக்கோயில்கள் இம்மாவட்டத்தில் நிரம்ப உள்ளன.

இத்திருக்கோயில்களைப் பற்றிய “திருக்கோயில்கள் வழிகாட்டி ” நூலை வெளியிடுவது சிறந்ததொரு ஆன்மீகப் பணியாகும், அன்பர் பணியுமாகும்.

நூல் சிறக்க நல்வாழ்த்துக்கள்...!

R. காமராஜ்

மா. வீரசண்முகமணி இ.ஆ.ப.
அரசு செயலாளர்
119, உத்தமர் காந்தி சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
அலுவலகம் : 044 28334815
நிகரி : 044 28334816
மின்னஞ்சல் : endowments@tnhrce.org

வாழ்த்துரை

" கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் " என்பது திருக்கோயில்கள் தொடர்பான பழமொழி ஆகும்.

கோயில்களை மையமாகக் கொண்டே தம்முடைய வசிப்பிடங்களை நம் முன்னோர்கள் அமைத்துக்கொண்டனர்.

" இரையைத் தேடுவது இவ்வுலக வாழ்க்கைக்கு'
இறையைத் தேடுவது அவ்வுலக வாழ்க்கைக்கு"

என்னும் இவ்வரிகளை தம் இலக்காகக் கொண்டு வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள். இறைவன் எல்லா இடங்களிலும் நிறைந்திருப்பான். அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் விளங்குபவன் இறைவன். அவனது திருவருளை திருக்கோயில்களின் வழியே பெற்றனர் நம் மூதாதையர்கள்.

பசுவின் உடல் முழுவதும் பால் வியாபித்திருப்பினும் அப்பால் சத்தினைப் பசுவின் மடியிலிருந்தே நாம் பெறுகிறோம் அல்லவா ? நம் திருக்கோயில்களின் தத்துவம் இதுவே.

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்எனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே!

என்ற மணிவாசகரின் மணிமொழிக்கேற்பவல்ல அந்த இறைவனை திருக்கோயில்களில் கண்டுணர்ந்தனர், வாழ்த்தினர், வழுத்தினர்.

திருக்கோயில்களில் எழுந்தருளியிருக்கும் கடவுளர் மீது இப்பெருமக்கள் கொண்ட ஈடுபாட்டிற்கு எல்லையே இல்லை.

தங்களது வசிப்பிடங்களாகிய இல்லங்களை அழியக் கூடிய தென்னங்கீற்றுக்களையும், பனையோலைகளையும், செங்கற்களையும் கொண்டு அமைத்த நம் முன்னோர்கள் இறைவனின் வசிப்பிடங்களைம் மட்டும் அழிவில்லாத கருங்கற்களால் அமைத்தனரெனில் புகழ ?

மா. வீரசண்முகமணி இ.ஆ.ப
அரசு செயலாளர்

சுற்றுலா, பண்பாடு மற்றும்
அறநிலையங்கள் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.
தொலைபேசி : 044 25670820

வாழ்த்துரை

நம் செந்தமிழ் நாட்டின்கண் திகழும் பல்லாயிரக்கணக்கான திருக்கோயில்கள் இறைவழிபாட்டுக்கு மட்டும் உரியதன்று, கலைகளை வளர்க்கும் கலைக் கூடங்களாகவும் அவை மிளிர்கின்றன. சிற்பக்கலை, ஓவியக்கலை, நடனக்கலை, கட்டடக்கலை என ஆய கலைகள் பலவற்றை ஆக்கியளித்த பன்னோக்கு மன்றங்களே திருக்கோயில்கள் ஆகும்.

" வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம்" என்றும் "வன வளம் காப்போம்" என்றும் இன்று நாம் முழங்குகின்றோம். வனவளம் குறைந்த காரணத்தால் மழைவளம் குறைந்துவிட்டது. இஃது இன்றைய நிலை.

ஆனால், இதற்கு மாறாக திருக்கோயில்களில் தல விருட்சம் (தலமரம்) வளர்க்கப்பட்டது. ஒவ்வொரு கோயிலிலும் பல்வேறு மரங்களும், செடிகளும், கொடிகளும், மலர்களும் நிறைந்த நந்தவனமாகத் திகழ்கிறது.

" நீர் இன்றி அமையாது உலகு " என்றார் வள்ளுவப் பெருந்தகை. நீரில்லையேல் பயிரில்லை, பயிரில்லையேல் உயிரில்லை, இஃது முக்காலும் உண்மை.

நீரின் இன்றியமையாமையை நன்குணர்ந்த நம் முன்னோர்கள் திருக்கோயில்களில் தீர்வினைத் தந்தனர். திருக்கோயில்களில் வெட்டப்பட்ட தீர்த்தக் குளங்கள் தாம் அவை. திருக்கோயில்களின் தீர்த்தக் குளங்கள் நீர்ப் பிரச்சனையைத் தீர்த்து வைத்தன. கிராமத்துக் கிணறுகளுக்கு ஊற்றுக் கண்ணாய்த் திகழ்ந்தன.

மக்களின் பிரச்சினைகளை, வழக்குகளை ஆராய்ந்து தீர்த்துவைக்கும் தீர்ப்பாயங்களாகவும், நீதி மன்றங்களாகவும் திருக்கோயில்கள் இருந்திருக்கின்றன. மதுரை மீனாட்சி சொக்கநாதர் மாமனாக வந்து வழக்கு மன்றத்தில் சாட்சியளித்து ஏழை விதவையைக் காப்பாற்றியதை திருவிளையாடல் புராணம் சொல்லும். அந்த வழக்கு மன்றம் எது ? மதுரைத் திருக்கோயில் அல்லவா?

மா. வீரசண்முகமணி இ.ஆ.ப
அரசு செயலாளர்

119, உத்தமர் காந்தி சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.
அலுவலகம் : 044 28334815
நிகரி : 044 28334816
மின்னஞ்சல் : tn.endowments@tnhrce.org

வாழ்த்துரை

" கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் " என்பது திருக்கோயில்கள் தொடர்பான பழமொழி ஆகும்.

கோயில்களை மையமாகக் கொண்டே தம்முடைய வசிப்பிடங்களை நம் முன்னோர்கள் அமைத்துக்கொண்டனர்.

" இரையைத் தேடுவது இவ்வுலக வாழ்க்கைக்கு'
இறையைத் தேடுவது அவ்வுலக வாழ்க்கைக்கு"

என்னும் இவ்வரிகளை தம் இரு கண்களாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள். இறைவன் எல்லா இடங்களிலும் நிறைந்திருப்பான். அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் விளங்குபவன் அவன். அவனது திருவருளை திருக்கோயில்களின் வழியே பெற்றனர் நம் மூதாதையர்கள்.

பசுவின் உடல் முழுவதும் பால் சத்து பரவியிருப்பினும் அப்பால் சத்தினைப் பசுவின் திருமடியிலிருந்தே நாம் பெறுகிறோம் அல்லவா ? நம் திருக்கோயில்களின் தத்துவம் இதுவே.

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்எனது என்றவ ரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே!

என்ற மணிவாசகரின் மணிமொழிக்கேற்ப எல்லாம் வல்ல அந்த இறைவனை திருக்கோயில்களில் கண்டுகளித்தனர், வாழ்த்தினர், வழுத்தினர்.

திருக்கோயில்களில் எழுந்தருளியிருக்கும் கடவுளர் மீது இப்பெருமக்கள் கொண்டிருந்த அன்பிற்கு எல்லையே இல்லை.

தங்களது வசிப்பிடங்களாகிய இல்லங்களை அழியக் கூடிய தென்னங்கீற்றுக்களையும், பனையோலைகளையும், செங்கற்களையும் கொண்டு அமைத்த நம் முன்னோர்கள் இறைவனின் வசிப்பிடமான கோயில்களைம் மட்டும் அழிவில்லாத கருங்கற்களால் அமைத்ததை என் சொல்லிப் புகழ ?

முகவுரை

பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகணபதி வர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே!

தொன்மை வாய்ந்த நமது கலாச்சாரத்தை நினைவுபடுத்தும் அரிய கருத்துக் கருவூலங்களாக கோயில்கள் விளங்குகின்றன. ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு தனிச்சிறப்பு உண்டு என்றால் அது மிகையாகாது. எனவே, கோவில்களை போற்றி வருவது நமது கடமையாகும்.

தமிழக மக்களின் ஆன்மீக ஈடுபாடு மற்றும் பக்தியினை சொல்ல வேண்டியதில்லை. அதிலும் பெரம்பலூர் மாவட்ட மக்கள் பக்தி செலுத்துவதுடன் திருக்கோயில் திருப்பணியிலும் அன்னதானம் செய்வதிலும் முதன்மை வகித்து வருகின்றனர். இந்த வகையில் பெரம்பலூர் மாவட்டத்தில் 3 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

தமிழ்நாட்டு பக்தர்களுக்கும், சுற்றுலா வரும் பயணிகளுக்கும் பயன்படும் வகையில் தெளிவான, விரிவான திருக்கோயில்கள் பயணியர் கையேடு ஒன்றை மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆசியுடன் தமிழ்நாடு இந்து அறநிலையத் துறையின் சார்பாக வெளியிட முடிவு செய்தோம்.

பெரம்பலூர் மாவட்ட திருக்கோயில்கள் பயணியர் வழி காட்டியான இந்த நூலில் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள முக்கிய திருக்கோயில்களின் சிறப்பானச் செய்திகள் இடம் பெற்றுள்ளன.

சிறுவாச்சூர் அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில், பெரம்பலூர் அருள்மிகு மதனகோபாலசுவாமி திருக்கோயில், செட்டிக்குளம் அருள்மிகு ஏகாம்பரேசுவரர் மற்றும் அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமிதிருக்கோயில், பாடாலூர் அருள்மிகு பூமலை சஞ்சீவிராயர் திருக்கோயில், வாலிகண்டபுரம் அருள்மிகு வாலீசுவரர் திருக்கோயில் என பற்பல கோயில்களால் புகழ்பெற்ற மாவட்டம் பெரம்பலூர் மாவட்டம்.

அழிவில்லாத ஆதிக்கு அழிவில்லாத கற்றளிகள், கற்கோயில்கள்!

இத்தகு சிறப்பு மிக்க திருக்கோயில்களைப் பற்றிய விவரங்கள் அடங்கிய திருக்கோயில்கள் வழிகாட்டி நூல் வெளியிடுவது சாலச்சிறந்த ஒரு பணியாகும்.

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள புகழ் பெற்ற ஆலயங்களைப் பற்றிய குறிப்புகளை இந்நூல் கொண்டுள்ளது.

சிறுவாச்சூர் அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில், பெரம்பலூர் அருள்மிகு மதனகோபாலசுவாமி திருக்கோயில், செட்டிக்குளம் அருள்மிகு ஏகாம்பரேசுவரர் மற்றும் அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமிதிருக்கோயில், பாடாலூர் அருள்மிகு பூமலை சஞ்சீவிராயர் திருக்கோயில், வாலிகண்டபுரம் அருள்மிகு வாலீசுவரர் திருக்கோயில் என பற்பல கோயில்களால் புகழ்பெற்ற மாவட்டம் பெரம்பலூர் மாவட்டம்.திருக்கோயில் போன்ற பல்வேறு திருக்கோயில்களைப் பற்றிய தல வரலாறுகளைக் கொண்டுள்ள இந்நூல் திருக்கோயில்களின் ஆவணத் திரட்டாகவும் திகழ்கின்றது.

இந்நூல் வெளிவர உறுதுணை புரிந்த அனைவர்க்கும் நல் வாழ்த்துக்கள்!

மா. வீரசண்முகமணி இ.ஆ.ப


இப்படி திருக்கோயில்கள் மக்களுக்குச் செய்த சேவைகளைச் சொல்லிட சொற்கள் போதாது......

இத்திருக்கோயில்களின் மகிமையை பக்தர்கள் உணர்ந்திட ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது தான் இந்நூல் .....

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பிரசித்தபெற்ற திருக்கோயில்களின் சிறப்பை இந்நூல் வழியே உணரலாம்.

சிறுவாச்சூர் அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில், பெரம்பலூர் அருள்மிகு மதனகோபாலசுவாமி திருக்கோயில், செட்டிக்குளம் அருள்மிகு ஏகாம்பரேசுவரர் மற்றும் அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமிதிருக்கோயில், பாடாலூர் அருள்மிகு பூமலை சஞ்சீவிராயர் திருக்கோயில், வாலிகண்டபுரம் அருள்மிகு வாலீசுவரர் திருக்கோயில் என பற்பல கோயில்களால் புகழ்பெற்ற மாவட்டம் பெரம்பலூர் மாவட்டம்.

இந்நூல் பக்தர்களுக்கு ஒரு வரப்பிரசாதம், இந்நூலை நன்னூலாகக் கொண்டுவரப் பாடுபட்ட அனைவருக்கும் நல்



மா. வீரசண்முகமணி இ.ஆ.ப

நமது திருக்கோயில்களின் சிறப்புகளை பக்தர்கள் அறிந்து பயன்படும் வகையில் திருக்கோயில் பயணியர் கையேடு வெளியிட வேண்டும் என்ற கருத்தில், இக்கையேட்டினை உடன் வெளியிட அனுமதி வழங்கிய இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர். அவர்களுக்கும், அரசுச் செயலர் அவர்களுக்கும் மற்றும் ஆணையர் அவர்களுக்கும் நன்றி.

மேலும் இக்கையேட்டினை வெளியிட உதவிகள் புரிந்த அரியலூர் மாவட்ட உதவி ஆணையர், இக்கையேட்டிற்கு திருக்கோயில்கள் பற்றிய செய்திகள் வழங்கிய அனைத்து திருக்கோயில் செயல் அலுவலர்கள், ஆய்வாளர்கள், பரம்பரை அறங்காவலர்கள், மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றி.

இதை அழகிய படங்களுடன் சிறப்பாக அச்சிட்டுத் தந்த திருச்சி, திருமலை, பிரிண்டர்ஸ் அச்சகத்தாருக்கும் நன்றி உரித்தாகுக.

இந்த நூலைப் பக்தர்களும் தெய்வீகச் சுற்றுலா வருபவர்களும் வாங்கிப் படித்து பயன் அடையுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.



(சி. கல்யாணி)
இணை ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை,
திருச்சிராப்பள்ளி மண்டலம்